# கற்பனைக் கதைகளால் நாட்டை முன்னே கொண்டு செல்ல முடியாது! தேர்தல் வாக்குறுதிகளின் இறுதி முடிவு நம்மை வங்குரோத்தாக்கியது

## வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து ஜனாதிபதி ரணில் உரை



இன்று நாடாளுமன்ற அமர்வில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தடம் புரண்டிருந்த இலங்கையின் பொருளாதாரத்தை கடந்த வருடத்தில் மீண்டும் சரியான பாதையில் தூக்கி நிறுத்த முடிந்ததாகத் தெரிவித்துள்ளார்.

அதற்காக மக்கள் கடுமையாக உழைத்த போதும், சில தரப்பினர் நாட்டைப் பின்நோக்கி இழுக்க முயற்சித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

கற்பனைக் கதைகளால் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது எனவும் நீண்ட காலமாக அரசியல் கட்சிகள் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளின் இறுதி முடிவு, நாட்டை வங்குரோத்து அடையச் செய்ததாகத் தெரிவித்த ஜனாதிபதி, துரதிஷ்டவசமாக நாட்டில் உள்ள சில தரப்பினர் இதனை இன்னும் புரிந்து கொள்ளவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து இலங்கையின் 78 ஆவது வரவு செலவுத் திட்ட உரையை நிகழ்த்திய ஜனாதிபதி, அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனுமதி பெறுவதற்கு புதிய பொறிமுறை ஒன்றை அறிமுகம் செய்யவும், புதிய திட்டங்கள் தொடர்பில் மீளாய்வு செய்யவும் அரச குழு ஒன்று நிறுவப்படும் என தெரிவித்தார்.

அந்தக் கட்டமைப்புக்கு வெளியே எந்தத் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட மாட்டாது எனவும், அபிவிருத்தித் திட்டங்களின் ஊடாக எதிர்பார்க்கும் நோக்கங்களை உரிய காலத்தில் நிறைவு செய்ய 2024 முதல் ஒவ்வொரு அமைச்சிலும் விசேட பிரிவொன்று நிறுவப்படும் என்றும் அறிவித்தார்.

இம்முறை கொண்டுவரப்படும் வரவு செலவுத் திட்டம், நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் மற்றும் தற்போதைய சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப புதிய பொருளாதார அடித்தளத்தை அமைக்கும் வரவு செலவுத் திட்டமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வெற்றியை விட நாட்டின் வெற்றியே தனக்கு முக்கியம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது உரையில் குறிப்பிட்டார். (04)


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 26 திங்கட்கிழமை 13.11.2023 கதிர் 111



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க 1500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

### வரவு செலவுத்திட்டத்தில் தமிழருக்கான திட்டங்கள்

வடக்கு கிழக்கில் வீடற்ற குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்காக 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் எனவும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முரண்பாடுகள் முடிவுக்கு வந்து இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாத இடங்களுக்காக 2000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளதாகவும் இன்றைய தனது வரவு செலவுத்திட்ட உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் தமிழ் பேசும் மக்களுக்காகவும், அவர்கள் பரந்து வாழும் பிரதேசங்களுக்காகவும் ஜனாதிபதி வெளியிட்ட அறிவிப்புகள் -

யாழ்ப்பாணத்தில் நிலவும் நன்னீர்ப் பிரச்சினைக்கு தீர்வு. அதன் அடிப்படைப் பணிகளுக்காக 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.

யாழ்ப்பாணத்தை உள்ளடக்கி புதிய முதலீட்டு வலயம் நிறுவப்படவுள்ளது. ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், திருகோணமலை, பிங்கிரிய, கண்டி ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு புதிய முதலீட்டு வலயங்களை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

வடக்கு கடற்றொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிக்க தனியார் துறையுடன் இணைந்ததாக திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும். மாகாண கடற்றொழில் சபைகள் ஸ்தாபிக்கப்படவுள்ளன. அரச மற்றும் தனியார் துறை சார்ந்த ஒன்றிணைந்த வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க 1500 மில்லியன் ஒதுக்கீடு.

விவசாய, மீன்பிடித்துறைகளை மேம்படுத்த விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதற்காக 2500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

பயிரிடப்படாத உலர் வலய காணிகளில் வேறு பயிர்ச்செய்கை மேற்கொள்ளவும் அதற்காக அரச காணிகளில் 300 ஏக்கர் ஒதுக்கவும் சட்டத்திருத்தம்.

மீன்பிடித்துறை மேம்பாட்டிற்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு . நன்னீர் மீன் வளர்ப்பு 2➤

## மூலதனச் செலவுக்கான ஒதுக்கீடு 1260 பில்லியனாக அதிகரிப்பு!

2024 வரவு செலவுத்திட்டத்தில் மூலதனச் செலவுக்கான ஒதுக்கீடு 1260 பில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது மொத்தத் தேசிய உற்பத்தியில் 4 சதவீதம் ஆகும்.

பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட திட்டங்களை நிறைவு செய்ய 55 பில்லியன் ரூபாய் மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சேதமடைந்துள்ள கிராமிய வீதிகளைப் புனரமைக்க 10 பில்லியன் ரூபாவும் இயற்கை அனர்த்தங்களால் சேதமடைந்த வீதிகளையும், பாலங்களையும் புனரமைக்க 2,000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் குடிநீர்ப் பிரச்சினைகள் இருப்பதால், பன்முகப்படுத்தப்பட்ட நிதியைப் பயன்படுத்தும் போதும் வெளிநாட்டு கடன் உதவிகளைப் பெறும்போதும் நீர்த் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என ஜனாதிபதி தனது வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டார்.

## மொட்டு அரசாங்கத்தின் நிதி அமைச்சரே ரணில்!

### பட்ஜெட்டில் எங்கள் கொள்கைகள் இருக்க வேண்டும் என்கிறார் நாமல்



இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல விடயங்கள் கடந்த வரவு - செலவுத் திட்டத்திலும் முன்மொழியப்பட்டதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்க்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற வகையில் இன்று திங்கட்கிழமை 2➤

## அரச ஊழியர்களுக்கான வாழ்க்கை செலவு கொடுப்பனவு அதிகரிப்பு

அரச ஊழியர்களுக்கு 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

எனவே, அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஜனவரி 2024 முதல் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 10,000 ரூபாவால் அதிகரிக்கப்படுவதற்கான யோசனையை நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

எனினும் இந்தக் கொடுப்பனவு 2024 ஏப்ரல் மாதச் சம்பளத்துடனேயே வழங்கப்படும் என்றும், இதற்கமைய அந்த கொடுப்பனவு 17,800 ஆக உயர்த்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் வரி வருவாயில் 35 சதவீதமானது அரசாங்க சேவையாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கச் செலவிடப்படுகிறது என்றும், ஊதியத்தை உயர்த்த வேண்டுமாயின் அரசின் வருமானத்தை உயர்த்த வேண்டும். வரி முறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



## யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான விமானத் தாக்குதலில் பலியானோர் நினைவு

### இன்று காலை ஆலயத்தில் அனுட்டிப்பு

யாழ்ப்பாணம் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீதான விமானத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று நடைபெற்றன.

ஆலயத்தில் காலை திருப்பலியின் நிறைவில் நடைபெற்ற இந்த நினைவேந்தலில், 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# 33 வருடங்களாக மறுக்கப்பட்டு வந்த பொத்துவில் கனகர் கிராம மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்த 33வருடங்களாக மறுக்கப்பட்டு வந்த பொத்துவில் கனகர் கிராம மக்களில் முதற்கட்டமாக 73 பேருக்கு காணி அனுமதிப்பத்திரம் தீபாவளி பரிசாக வழங்கிவைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், குறித்த காணி அனுமதிப்பத்திரங்களை நேற்று முன்தினம் திருகோணமலை காணி ஆணையாளர் பணிமனையில் வைத்து வழங்கி வைத்தார்.

ஆளுநர் செந்தில் தொண்டமான் கடந்த யூலை மாதம் 11ஆம் திகதி அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த வேளை சர்ச்சைக்குரிய கனகர் கிராமத்திற்கும் சென்றிருச்தார். அப்போது அங்கு அவர் உறுதியளித்தபடி குறித்த காணி அனுமதிப்பத்திரங்களை அவர் நேற்று முன்தினம் வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் களான தவராசா கலையரசன், எஸ்.எம். முஷாரப், கபில அத்துக்கோரள பொத்துவில் பிரதேச செயலாளர் பிர்னாஸ் உள்ளிட்ட பிரமுகர்களும் சமுக மளித்திருந்தனர்.



## தீபாவளிக்கு மது வாங்கச் சென்றவர்களில் ஒருவர் சடலமாக மீட்பு - மற்றொருவர் மாயம்



தீபாவளிப் பண்டிகையையொட்டி மதுபானம் வங்கச் சென்ற இருவர், பத்தனை ஆற்றில் விழுந்து காணாமல் போய் இருந்த நிலையில், அதில் ஒருவரின் சடலம் டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அடிவாரத்தில் இருந்து நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது என்று திம்புள்ள பத்தனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரேக்லி தோட்டத்தைச் சேர்ந்த 42 வயதுடைய பழனியாண்டி மோகன்ராஜ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட் டுள்ளார். அதே தோட்டத்தைச் சேர்ந்த 51 வயதுடைய பாலமாணிக்கம் பிரேம்குமார் காணாமல்போயுள்ளார்.

இவர்கள் இருவரும் உறவினர்கள் எனவும், நேற்றுமுன்தினம் மாலை 6.00 மணியளவில் மதுபானம் வாங்கச் சென்றனர் எனவும், அவர்கள் திருப்பி வராததால் நேற்று அவர்களது உறவினர்கள், பொலிஸில் முறையிட்டனர் எனவும் திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து பொலிஸார் தேடுதல் வேட்டையில் இறங்கினர்.

இவர்கள் இருவரும் தாம் வசிக்கும் தோட்டத்திலிருந்து மதுபானசாலைக்குச் செல்வதற்காக பத்தனை ஆற்றின் ஊடாக உள்ள சிறிய அணையைக் கடக்க முற்பட்டபோது, இருவரும் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் திம்புள்ள பத்தனை பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மீட்கப்பட்டுள்ள சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. காணாமல்போனவரைத் தேடும் பணி இடம் பெற்று வருகின்றது. (அ)

## மொட்டு அரசாங்கத்தின்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது வரவு - செலவுத்திட்ட உரையைச் சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே நாமல் ராஜபக்க்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதல் பார்வையில் கடந்த பட்ஜெட்டிலும் பல விடயங்களை முன்வைத்துள்ளார். அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை என்று தெரிகிறது. எனவே மீண்டும் அவை முன்வைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் நிதி அமைச்சராக அவர் வந்துள்ளார். அப்படியானால், பட்ஜெட் முன்மொழிவுகளில் எங்கள் கொள்கைகள் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## யாழ். குருநகர் புனித யாகப்பர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்களின் உறவினர்கள் உள்ளிட்டோர் சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதியன்று, காலை திருப்பலி வழிப்பாட்டுக்கு மக்கள் கூடியிருந்த வேளை, இலங்கை விமானப் படையின் "சுப்பர் சொனிக்" விமானங்கள் ஆலயத்தின் மீது குண்டுகளை வீசியதில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த 8 வயதுச் சிறுமி உள்ளிட்ட 13 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 25க்கும் அதிகமானோர் படுகாயமடைந்திருந்தனர். (04)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேம்பாட்டிற்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

பால் பண்ணையாளர்களுக்கு விசேட கடன் திட்டங்கள் வழங்கப்படும்.

கட்டிட நிர்மாணத்துறைக்கு விசேட திட்டங்களும் அவர்களுக்கு அரச காணிகளை வழங்கவும் திட்டம்.

துறைமுகங்களை அபிவிருத்தி செய்யப்படும். அதில் திருகோணமலைத் துறைமுக அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நுவரெலியா மாவட்டத்தில் எதிர்காலத்தில் பல்கலைக்கழகம் உருவாக்கப்படும். பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமைகள் வழங்கப்படும். இதற்கு ஆரம்ப கட்டமாக 4 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.

மலையகப் பகுதியில் கிராமிய அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இதற்காக 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம், மாகாணங்களால் பல்கலைக்கழகங்களை ஸ்தாபிக்க முடியும். எனவே, இந்த ஒழுங்குமுறை எதிர்வரும் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும். (04)




## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# சுகதேகம் ஆதுரசாலை சித்த மருத்துவ நிலையம் நாவற்குழி நெய்தல் கடற்கரை நகரில் திறப்பு











சுகதேகம் ஆதுரசாலை (ஆதுலர்சாலை) எனும் சித்த மருத்துவத்துடன் இணைந்த மருத்துவ நிலையக் கட்டடம் நெய்தல் கடற்கரை நகரில் கடந்த சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மெல்போர்ண் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மருத்துவரும் இலங்கையின் புகழ் பூத்த பொப்பிசையாளருமான நித்தி கனகரத்தினம் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் நீதிவான் ஆ.ஆனந்தராஜா, யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தின் தூதரக அதிகாரி மனோஜ் குமார், வடக்கு மாகாண சுகாதார, சுதேசமருத்துவ, நன்நடத்தை, சிறுவர் பராமரிப்பு அமைச்சின் செயலாளர் சிவருகுநாதன் திருவாகரன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் சுகதேகம் ஆதுரசாலையும் யோகா மற்றும் தியானப் பயிற்சி நிலையமும் திறந்துவைக்கப்பட்டன.

# கேரளா குண்டு வெடிப்பில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்ததாக தகவல்



கேரளாவில் கிறிஸ்தவ ஜெபக் கூட்டத்தில் நடந்த குண்டு வெடிப்பில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது.

எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள மலயாட்டூரைச் சேர்ந்த 45 வயதான சாலி பிரதீபன் என்ற பெண் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக கேரள அரசு அறிவித்துள்ளது.

வென்டிலேட்டர் ஆதரவுடன் சிகிச்சைபெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மேலும் 17 பேர் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் எட்டு பேர் ஐசியுவில் உள்ளனர். ஒருவர் ஆபத்தான நிலையில் உள்ளார்.

கேரளா மாநிலம், எர்ணாகுளம் மாவட்டம் களமச்சேரி பகுதியில் உள்ள மதவழிபாட்டு தளத்தில் கடந்த ஒக்டோபர் 29 ஆம் திகதி காலை 9 மணியளவில் நடந்த குண்டு வெடிப்பு மக்களை அச்சத்தில் ஆழ்த்தியது. இந்தக் கூட்டத்தில் மூன்று இடங்களில் பயங்கர வெடி விபத்துகள் ஏற்பட்டன. இந்த விபத்தில் 2 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். பின்னர் 12 வயதுச் சிறுமி லிபினா சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மேலும், இந்த விபத்தில் 50 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக, குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் சோதனை நடத்த இந்தியத் தேசிய புலனாய்வு அமைப்புக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உத்தரவிட்டார். இதையடுத்து, இந்த விவகாரம் குறித்து என்.ஐ.ஏ உள்ளிட்ட புலனாய்வு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஜெபக் கூட்டத்தில் குண்டுவெடிப்பு நடந்ததை தொடர்ந்து, கொச்சி பகுதியை சேர்ந்த டோமினிக் மார்ட்டின் (52) என்பவர் கொடைகாரா காவல் நிலையத்தில் சரணடைந்தார். அவர் அளித்த வாக்குமூலத்தில், யெகோவாவின் சாட்சிகள் சபையில் கடந்த 16 ஆண்டு களாக உறுப்பினராக இருக்கிறேன். சபை உறுப்பினர்கள், மதக் கொள்கையில் இருந்து விலகிச் சென்றதால், அவர்களது ஜெபக் கூட்டத்தில் குண்டு வைத்தேன், என்று தெரிவித்துள்ளார்.

கொள்கை, கோட்பாடுகளில் இருந்து விலகி, சதிகார சபையாக மாறி, பொய்யைப் பரப்பி வருகின்றனர். இதைத் தடுப்பதற்காகவே குண்டுகளை வெடிக்கச் செய்தேன், என்று, முன்னதாக சமூக வலைத்தளத்தில் நேரலை வீடியோ பதிவையும் அவர் வெளியிட்டிருந்தார்.

ஆனால், டோமினிக் எங்கள் சபையை சேர்ந்தவர் அல்ல. அவர் யாரென்றே தெரியாது, என யெகோவாவின் சாட்சிகள் சபை நிர்வாகிகள் மறுப்பு தெரிவித்தது நினைவுகூரத்தக்கது. (04)



# ராணுவ வீரர்கள் இருக்கும் இடமே அயோத்தி படையினருடன் தீபாவளி கொண்டாடிய மோடி

ராமர் இருக்கும் இடம் அயோத்தி என்கிறார்கள், என்னைப் பொறுத்தவரை ராணுவ வீரர்கள் இருக்கும் இடமே அயோத்தி, என எல்லைப் பாதுகாப்புப்படை வீரர்களுடன் தீபாவளியைக் கொண்டாடிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றதில் இருந்து ஒவ்வோராண்டும் தீபாவளிப் பண்டிகையை ராணுவ வீரர்களுடன் கொண்டாடுவதை அவர் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

அந்த வகையில், இந்த ஆண்டு தீபாவளியை ஹிமாச்சலப் பிரதேசத்தின் லெப்சாவில் எல்லை பாதுகாப்புப்படை வீரர்களுடன் ஞாயிற்றுக்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கொண்டாடினார்.

பினனர் அவர் வீரர்கள் மத்தியில் பேசியபோது, தீபாவளிப் பண்டிகையின் ஒருங்கிணைப்பும், வீரர்களின் தைரியத்தின் எதிரொலிகளும் நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் அறிவொளி வழங்கும் தருணமாகும். நாட்டின் கடைசி கிராமமான எல்லைப் பகுதிகளைச் சேர்ந்த கிராமங்கள் இப்போது முதல் கிராமங்களாகக் கருதப்படுகின்றன.

குடும்பம் எங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் விழாக்கள் நடைபெறுகின்றன. ஆனால், கடமையின் மீது இருக்கும் பக்தியின் காரணமாக, எல்லையைப் பாதுகாப்பதற்காக பண்டிகை நாளிலும் தமது குடும்பத்தை விட்டு விலகி இருக்கும் சூழ்நிலையில், 140 கோடி இந்தியர்களை தங்கள் குடும்பமாக கருதும் உணர்வு பாதுகாப்பு படையினருக்கு மட்டுமே உண்டு. இதற்காக நாடு உங்களுக்கு நன்றிக் கடன்பட்டுள்ளது.

அதனால்தான் ஒவ்வொரு வீட்டிலும் உங்கள் பாதுகாப்பிற்காக ஒரு 'தீபம்' ஏற்றப்படுகிறது. மேலும் ராமர் இருக்கும் இடமே அயோத்தி என்கிறார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரை ராணுவ வீரர்கள் இருக்கும் இடமே அயோத்தி. வீரர்கள் இருக்கும் இடம் எந்த கோவிலுக்கும் சளைத்ததல்ல. கடந்த 30-35 ஆண்டுகளாக ராணுவ வீரர்களுடன் தீபாவளியைக் கொண்டாடி வருகிறேன். நான் முதல்வராகவோ, பிரதமராகவோ இல்லாத போதும் தீபாவளி நாளில் எல்லைக்குச் சென்று வீரர்களுடன் கொண்டாடுவேன்.

ராணுவ வீரர்களுக்கும், ராணுவ வீரர்களின் தியாக மரபுக்கும் மரியாதை செலுத்துவதாகவும் தெரிவித்த மோடி, நாட்டின் வலிமையான சுவர் நாங்கள்தான் என்பதை எல்லையில் உள்ள வீரர்கள் எப்போதும் நிரூபித்துள்ளனர், என்றும் குறிப்பிட்டுள்ளா.

தேசத்தைக் கட்டமைப்பதில் ஆயுதப்படைகளின் பங்களிப்பை எடுத்துரைத்த இந்தியப் பிரதமர், பூகம்பம் மற்றும் சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகள் மற்றும் சர்வதேச அமைதிப் பணிகளின் போதும் ஆயுதப்படைகள் பல உயிர்களைக் காப்பாற்றியுள்ளன. ஆயுதப்படைகள் இந்தியாவின் பெருமையை புதிய உயரங்களுக்கு கொண்டு சென்றுள்ளன, என்றும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் அமைதி காக்கும் படையினருக்கான நினைவு மண்டபம் ஒன்றை முன்மொழிந்ததையும், அது ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதையும் குறிப்பிட்ட பிரதமர், உலக அமைதியை நிலைநாட்டுவதற்கான அவர்களின் பங்களிப்புகளை அது அழியாததாக மாற்றும் என்றும் கூறினார். (04)



# ஒட்டுமொத்த உலகமும் ஆபத்தானதாக மாறிவிடும்! கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சுட்டிக்காட்டு

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஏற்கனவே இந்தியா மீது தான் முன்வைத்திருந்த குற்றச்சாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்திய உளவு அதிகாரிகளுக்கு பங்குள்ளதாக கனடா பிரதமர் குற்றம் சாட்டியிருந்தார்.

இரு நாடுகளின் நட்புறவில் ஏற்பட்ட விரிசல் காரணமாக இந்தியாவில் இருந்த அதிகப்படியான 40 கனடா தூதரக அதிகாரிகளை கனடா திரும்பப் பெற்றது.

இந்த நிலையில், அமெரிக்க தேசியச் செயலர் அண்டனி பிளிங்கன், கனடா நிஜ்ஜார் கொலை வழக்கில் கனடா விசாரணையை மேற்கொள்ளவும் அதற்கு இந்தியா ஆதரவு அளிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்துள்ள ட்ரூடோ, கனடாவில் நிகழ்ந்த நிஜ்ஜார் கொலையில் இந்திய உளவாளிகளுக்கு பங்கிருப்பதாக நம்பத்தக்க தகவல் கிடைத்த போதே நாங்கள் இந்த விஷயத்தில் எங்களுக்கு உதவ இந்தியாவைத் தொடர்பு கொண்டோம். இந்தியாவை மட்டுமல்ல அமெரிக்கா உள்ளிட்ட நட்பு நாடுகளிடமும் இது குறித்து பேசினோம்.

ஜனநாயகத்தின் இறையாண்மையையும் சர்வதேசச் சட்டத்தையும் மீறிய இந்த விஷயத்தை நாங்கள் மிக தீவிரமாக எடுத்து கொண்டுள்ளோம். சட்ட அமலாக்கம் மற்றும் விசாரணை அமைப்புகளோடு இணைந்து இதில் தொடர்ந்து வேலை செய்யவுள்ளோம்.

சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்ட நாடு கனடா, இன்னொன்றையும் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது, பெரிய நாடுகள் பின்விளைவுகளை யோசிக்காமல் சட்டத்தை மீறும்போது ஒட்டுமொத்த உலகமும் எல்லோருக்கும் ஆபத்தானதாக மாறிவிடும், எனத் தெரிவித்துள்ளார். (04)

# ஹவாய் தீவில் மீண்டும் காட்டுத்தீ!

ஹவாய் தீவில் மீண்டும் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. ஆயினும், இதனால் மனிதர்களுக்கோ குடியிருப்புப் பகுதிகளிலோ பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில்தான் இந்த மழைக்காடுகளில் 99 பேரைப் பலியாக்கிய காட்டுத்தீ விபத்து நிகழ்ந்தது.

ஓஹூ பகுதியில் ஏற்பட்டுள்ள இந்த விபத்து, காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டு இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இதுவரை காட்டுத்தீ ஏற்படாத மழைக்காடுகள் கூட தீக்கு இரையாவது அபாயமான சூழலாகக் கருதப்படுகிறது.

பசுமை செறிந்துள்ள ஓஹூ தேசிய சரணாலயம், பாதுகாக்கப்பட வேண்டிய உயிரிகள் என அமெரிக்கா அறிவித்திருந்த 22 உயிரினங்களுக்கான புகலிடமாக உள்ளது. மேலும், 200 க்கும் மேற்பட்ட அரிய உயிரினங்களும் தாவர இனங்களும் இந்தப் பகுதியில் மட்டும் காணக் கூடியவையாகவும் இருக்கின்றன.

இப்போது ஏற்பட்ட காட்டுத் தீயினால் என்னென்ன சேதங்கள் ஏற்பட்டுள்ளன என இன்னும் அறிய இயலவில்லை, என்று அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. (04)



# பாலமுனைப் பிரதேசத்தில் விழிப்புணர்வுச் செயற்பாடு



(எம்.எப். நவாஸ்)

டெங்கு நோய் மற்றும் மரணத்தில் இருந்தும் எம்மைப் பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளிலான செயற்றிட்டமொன்று பாலமுனை பிரதேசத்தில் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய காரியாலயத்தினால் அதன் வைத்திய அதிகாரியின் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

அதில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கண்காணிப்பில் பொதுமக்கள் கலந்து கொண்டு சுற்றுச்சூழலைச் சுத்தம் செய்தனர்.

## தொற்றுக்கழிவுகள் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ களவிஜயமும் பயிற்சியும்





(நூருல் ஹுதா உமர்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் தொற்றுக்கழிவு மற்றும் திண்மக்கழிவுளை முகாமைத்துவம் செய்யும் செயற்றிட்டத்தின் கீழ், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கான கள விஜயமும், பயிற்சிநெறியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

கடந்த வெள்ளியன்று சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரியின் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில், பொதுச்சுகாதார மற்றும் தர முகாமைத்துவப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி வளவாளராகக் கலந்து கொண்டு விரிவுரையாற்றியிருந்தார்.

## காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் தீபாவளிப் பூப்பந்தாட்டப் போட்டி



(வி.ரி. சகாதேவராஜா)

தீபத்திருநாளை முன்னிட்டும் காரைதீவு விளையாட்க்கழகத்தின் 40 வது ஆண்டு நிறைவு விழாவை முன் னிட்டும் நடத்திய மாபெரும் பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் நேற்று நடைபெற்றன.

கழகத் தலைவர் தம்பிராசா தவக்குமார் தலைமையில், விபுலானந்தா மத்திய கல்லூரி பூப்பந்தாட்ட அரங்கில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், பிரதம அதிதியாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட நிறைவேற்று பொறியியலாளரான பட்டய பொறியாளர் எந்திரி அருமைநாயகம் லிங்கேஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக, கழகத்தின் போசகர்களான காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், உத்தரவு பெற்ற நில அளவையாளர் வே.இராஜேந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு வெற்றி கிண்ணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. கழகச் செயலாளர் எஸ்.கிரிசாந்த் நிகழ்ச்சிகளைத் தொகுத்து நன்றியுரை வழங்கினார்.

சுற்றுப்போட்டிக்கான அனுசரணையை பட்டயப் பொறியியலாளர் ஏ.லிங்கேஸ்வரன் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.




## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச கணக்கியல் நாள் நிகழ்வுகள்



சர்வதேச கணக்கியல் நாள் நிகழ்வுகள் கடந்த 10 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் நடைபெற்றன.

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் கணக்கியல் துறையினால் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன், முன்னாள் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் பிரதிநிதிகள் பணியாளர்கள், மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# விடுதலையாகி ஒரு வருடமாகியும் சிறையிலேயே வாடும் இலங்கையர்






முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 வருட சிறையின் பின் விடுதலையான பின்னும் ஒரு வருடச் சிறையில் இருக்கும் நான்கு பேரின் நிலை தொடர்பாக அவர்களில் ஒருவரான சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதற்காக வருடக்கணக்காக போராடிக் கொண்டிருக்கும், சாந்தனின் சகோதரரான மதிசுதா கடந்த சனிக்கிழமை தனது சமூக வலைத்தளத்தில் இட்டுள்ள பதிவு - கடந்த வருடம் இதே நாள் (11.11.2022) அன்று 7 பேரும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இந்தியாவைச் சேர்ந்த பேரறிவாளன், ரவிச்சந்திரன், நளினி ஆகியோர் இந்தியக் குடியுரிமை உள்ளவர்கள் என்ற அடிப்படையில் வெளியே விடப்பட்டனர்.

இலங்கையைச் சேர்ந்த முருகன், சாந்தன், ராபட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் இலங்கைப் பிரஜைகள் என்பதால் திருச்சிக்கு மாற்றப்பட்டார்கள்.

சிறப்பு முகாம் என்ற பெயரிலிருந்தாலும் திருச்சி சிறைச்சாலை வளாகத்திலேயே தனிப் பொலிஸ் பாதுகாப்பில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

ஏனைய சிறப்பு முகாமில் உள்ளவர்களுடனும் எத்தொடர்பும் இல்லாமல் முருகனும் சாந்தனும் தனி அறையிலும் பயசும் ஜெயக்குமாரும் தனி அறைகளிலும் என வெவ்வேறாக பொலிஸ் பாதுகாப்பிலேயே உள்ளார்கள்.

விடுதலை எனக் கூறப்பட்டாலும் குடும்பத்தார் நேரில் சென்றால் மட்டுமே பார்க்க முடியும் போனில் பேசுவதற்குக் கூட அனுமதியில்லை.

4 பேரில் சாந்தன் மட்டுமே இலங்கையில் உள்ள தாயாரிடம் செல்ல விருப்பத்துடனும் முருகன் லண்டனில் உள்ள தனது மகளிடமும் பயஸ் , ஜெயக்குமார் நெதர்லாந்தில் உள்ள தமது உறவினரிடமும் செல்ல விருப்பம் தெரிவித்தனர்.

இவர்களில் சாந்தன் அவர்களிடம் இலங்கையில் இருந்து சென்றமைக்கான கடவுச்சீட்டு கை வசம் உண்டு அதை நீதிமன்றமே அவரிடம் ஒப்படைத்திருந்தது.

சாந்தனின் தாயார் இலங்கை இந்திய ஜனாதிபதி, பிரதமர் தமிழ்நாட்டு முதல்வர் இலங்கையில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரிடமும் தனது இறுதிக்காலத்திலாவது தனது மகனுடன் சேருங்கள் என மனுக்கொடுத்தும் யாருமே அவருக்கு ஒரு பதில் கூட அளித்ததில்லை.

இந்த 33 வருடத்தில் ஒரு தடவை கூட மகனைப் பார்த்ததில்லை என்பதை விட தொலைபேசி பேசக் கூட அனுமதி அளிக்கப்பட்டதில்லை.

தனி அறையில் அடைக்கப்பட்டுள்ள நால்வரும் நடைப்பயிற்சிக்காவது வெளியே விடுங்கள் என மனுக் கொடுத்த சம்பவங்களும் உண்டு. காரணம் தமது இயற்கைக் கடனில் இருந்து முழு ஆன்மீகவாதிகளான சாந்தன் முருகனின் பூசை மற்றும் தியானங்கள் எல்லாமே அதே அறைக்குள்த் தான் செய்கின்றார்கள்.

தனது விடுதலை தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் முருகன் தொடுத்த வழக்கிற்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு “இவர்கள் இலங்கைப் பிரஜைகள் தான் என்பதை இலங்கை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தி அழைத்துச் செல்லலாம்” என்றது

ஆனால் சாந்தன் தொடர்ந்த அதே வழக்கிற்கு ஒக்டோபர் மாதம் 18 ம் திகதி இப்படிச் சொல்லப்பட்டது “இரண்டு வாரங்களுக்குள் மத்திய மாநில அரசுகள் சாந்தனின் கோரிக்கைக்கு பதிலளிக்க வேண்டும் என் றது. ஆனால் இன்று நவம்பர் 11 ம் திகதியாகியும் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

முருகனுக்குச் சொன்ன அதே தீர்ப்பை சாந்தனுக்கு கூற முடியாது காரணம் சாந்தன் கையில் கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் பத்திரம் என்பன உள்ளன.இதன் நகர்வே இந்த நால்வரும் இறக்கும் வரைக்கும் சிறப்பு முகாமுக்குள் அடைத்து வைப்பதேயாகும். இது பற்றி தமிழ் அரசியல் தலைமைகளே வாய் திறக்காமல் இருக்கின்றன

சாந்தன் போன்ற சட்டத்தால் விடுவிக்கப்பட்ட கைதியொருவர் தனது சொந்த நாட்டுக்கு செல்ல முடியாமல் தண்டனைக்காலத்துக்கு மேலாகத் தண்டிக்கப்படும் அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கு தீர்வைக் கொடுக்காதவர்களால் தான் ஏனைய விடயங்களுக்குக் கொடுக்கப் படப் போகின்றதா ???

ஒன்றில் அவர்களை தூக்கில் இட்டுக் கொன்றிருக்க வேண்டும் அல்லது இப்போதாவது அதைச் செய்யுங்கள் இப்படி உளவியல்ரீதியாக 33 வருடத்துக்கு மேல் ஈழத் தமிழனை நீங்கள் தண்டித்துக் கொண்டிருப்பது மிகக் கொடூரமானதாகும்.

# முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு பகுதியில் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக வீடுகளில் சமையல் எரிவாய, பணம், துவிச்சக்கர வண்டி மற்றும் பட்டரிகள், தொலைபேசி என வீட்டில் காணப்படுகின்ற எவ்வகையான பொருட்களாயினும் வீட்டு உரிமையாளர் இல்லாத சமயத்தில் திருடப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக அத்தியாவசியத் தேவை கருதி வீட்டிலிருந்து வெளியே செல்லவோ, எந்த ஒரு நிகழ்வுகளுக்கும் அல்லது கோயில் பூசை வழிபாடுகளுக்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். வீட்டில் இருந்து வீட்டு உரிமையாளர் வெளியே சென்று சில நிமிடங்களிலேயே பொருட்கள் திருட்டுப் போய் விடுவதாகவும், இதன் காரணமாகப் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

வயது முறிந்தவர்கள், அங்கவீனமானோர் ஆகியோரது வீடுகளை இலக்கு வைத்து தொடர்ச்சியாக திருட்டு சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும், இச்சம்பவம் தொடர்பாக சிலர் புது குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்த போதிலும் தொடர்ச்சியாக திருட்டுக்கள் நடைபெறுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக சிலர் புது குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறையிடுவதில் ஆர்வம் காட்டவில்லை எனவும் குறிப்பிடுகின்றனர்.

எனவே, இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இப்பகுதி மக்களிடம் சென்று தகவல்களைப் பெற்று இப்பிரச்சினைக்கு உரிய தீர்வினைப் பெற்றுத் தர வேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (02)



# பத்திற்கும் மேற்பட்ட தபால் நிலையங்கள் விற்கப்படவுள்ளன!

## ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கங்களின் இணைத் தலைவர்



வரலாற்றுப் புராதன பெறுமதியையும் வர்த்தகப் பெறுமதியையும் கொண்ட கண்டி, நுவரெலியா தபால கங்கள் மட்டுமன்றி நாடு முழுவதிலுமுள்ள பத்துக்கும் மேற்பட்ட தபால் நிலையங்கள் தனியார் நிறுவனங்க ளுக்கு விற்பனை செய்யத் தயார்படுத்தப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கத்தின் இணைத் தலைவர் சம்பத் ஸ்ரீ லியனகே தெரிவித்தார்.


அதன்படி, கொழும்பு பிரதான தபால் நிலையம், மாத் தறை, குருநாகல், பத்தரமுல்லை, கொம்பனித் தெரு, அனுராதபுரம், தெஹிவளை போன்ற பகுதிகளிலுள்ள கட்டடங்களில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவ மிக்க தபால் நிலையங்கள் இவற்றுள் அடங்குவதாகவும், இவை மட்டுமன்றி வணிக ரீதியில் மதிப்புமிக்க இன்னும் சில தபால் நிலைய கட்டிடங்களும் விற்பனைக்கான பட்டியலில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டி தபால் நிலையக் கட்டிடம் 1894 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகவும் நுவரெலியா தபால் நிலையமும் அதன் காணியும் இன்றும் பிரித்தானிய அரசியின் உரிமத்தின் கீழேயே உள்ளது எனவும் சுட்டிக்காட்டிய அவர், காலி கோட்டை தபால் நிலைய கட்டிடம் 1700 இல் டச்சுக்காரர்க ளால் கட்டப்பட்டது எனவும், இவ்வாறான வரலாற்று மற்றும் தொன்மைமிகு தபால் நிலையங்களையும் வர்த்தக பெறுமதி கொண்ட அலுவலகங்களையும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் திட்டம் தோற்கடிக்கப்படும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைபெற விருந்த இரண்டு நாள் அடையாள வேலைநிறுத்தம் கைவிடப்பட்ட போதிலும், அரச சொத்துகள் விற்பனை செய்யப்படுகின்றமைக்கு எதிராக மக்களையும் அரச மற்றும் தனியார் துறை தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்த போராட்டம் தொடர்ந்து இடம்பெறும் எனவும் சம்பத் ஸ்ரீ லியனகே மேலும் தெரிவித்தார். (ரெந-19)

# கொலன்னாவை எண்ணெய்ச் சேமிப்பு முனைய வளாகத்தில் புதிய சிசிடிவி கமராக்கள் பொருத்த திட்டமிடப்படுகின்றது

## விசாரணை நடத்த வேண்டும் என அதிகாரிகள் கோரிக்கை



பன்னிரெண்டு கோடியே எழுபது இலட்சம் ரூபா செலவில் கொலன்னாவை எண்ணெய்ச் சேமிப்பு முனைய நிறுவனங்கள் வளாகத்தில் சிசிடிவி கமராக் களைப் பொருத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வளாகத்தில் ஏற்கனவே சிசிடிவி கமராக்கள் நிறுவப்பட்டுள்ள நிலையிலேயே, இவ்வாறு புதிய சிசி டிவி கமரா அமைப்பை நிறுவுவதற்கு பெருமளவில் நிதி செலவு செய்யப்படவுள்ளதாக அதன் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொண்ணூறு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த எண்ணெய்ச் சேமிப்பு முனைய நிறுவன வளாகத் தின் பாதுகாப்பிற்காக பாதுகாப்புப் படையினரும் இரா ணுவப் பிரிவினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், குறித்த நிறுவனத்திடம் ஐம்பது இலட்சம் ரூபா செலவில் வாங்கப்பட்ட ட்ரோன் கமராவும் உள்ள தாகவும், அது தற்போது பயன்படுத்தப்படாமல் பாது காப்புப் படையினரின் பாதுகாப்பில் ஒரு மூலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் புதிதாக மேலும் சிசிடிவி கமராக்களை பொருத்துவதற்கு எவ்வளவு தொகை செலவிடப்படப் போகிறது என்பது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என அதிகா ரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரெந-20)

# வடக்குக் கிழக்குப் பகுதிகளில் 18 ஆம் திகதி வரை கனமழை

வடக்கு மற்றும் கிழக்கில் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை கனமழை தொடரும் என யாழ்ப்பாண பல்க லைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

மத்திய வங்காள விரிகுடாவில் நாளைய தினம் செவ்வாய்க்கிழமை தாழமுக்கம் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால், இன்றைய தினம் திங்கட்கிழமை இரவு முதல் ஈரப்பதம் நிறைந்த காற்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திற்குள் வீசும்.

எனவே இன்றைய தினம் இரவு முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணத்தின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக 14,15 மற்றும் 16 ஆம் திகதிகளில் பல பகுதிகளுக்கும் மிகக் கன மழைக்கு வாய்ப்புள்ளது.

அதேவேளை இன்றைய தினம் முதல் வடக்கு மற்றும் கிழக்குக் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலை மையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கட லுக்குச் செல்வதில் அவதானமாக இருப்பது அவசியம், என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அடுத்தாண்டு கண்ணீர்ப் புகைக்குண்டு வாங்குவதற்கு பேச்சுக்கள் நடக்கின்றனவாம்


பொலிஸ் திணைக்களத்திற்கு அடுத்த வருடத்திற் கென கொள்வனவு செய்ய வேண்டிய கண்ணீர்ப்புகைக் குண்டுகள், மோப்ப நாய்கள், குதிரைகள் மற்றும் உபகர ணங்கள் குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னரே இந்த ஒவ்வொரு கொள்வனவு களையும் மேற்கொள்ள முடியும் என பொலிஸ் வட்டா ரம் தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த வருடத்திற்குத் தேவையான கண் ணீர்ப்புகைக் குண்டுகளுக்குத் தட்டுப்பாடு இல்லை என வும் அவை தேவையான அளவில் கையிருப்பில் உள்ள தாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெந-21)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.11.2023இல் வெளியிடப்பெற்றது.